பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

அன்பளிப்பு

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 சித்திரை 07 வெள்ளிக்கிழமை (19-04-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 143

# குடாநாட்டில் ராணுவ நடவடிக்கை எந்நேரத்திலும் ஆரம்பிக்கப்படலாம்!

## திருமலையில் குண்டு வீச்சு

சாவகச்சேரி, ஏப். 19

திருகோணமலையில், தமிழ் மக்கள் குடியிருப்புகள் மீது, ஸ்ரீலங்கா வான் படையின் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி உள்ளன.

நேற்று முன்தினம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என்றும்— இதன்போது ஏற்பட்ட சேத விவரங்கள் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வன்னிக்கு இடம்பெயர்வது பாதுகாப்பு என ஆலோசனை

சாவகச்சேரி, ஏப்ரல் 19

யாழ். குடாநாட்டில் மற்றுமொரு பாரிய இராணுவ நடவடிக்கை எந்நேரத்திலும் ஆரம்பமாகலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டால் குடாநாட்டில் வெடிக்கக் கூடிய பெரும் யுத்தத்தில் இடையில் சிக்கி வீணான உயிரழிவுகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, — பொதுமக்கள் தமது பாதுகாப்புக் கருதி — முன்னெச்சரிக்கையாகவே குடாநாட்டிலிருந்து வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடம்பெயர்வது நல்லது என ஆலோசனை கூறப்பட்டிருக்கின்றது.

குடாநாட்டில் எந்த நேரத்திலும் படை நடவடிக்கை ஆரம்பமாகலாம் என்ற தகவலை பி. பி. ஸி. மற்றும் வெரித்தாஸ் செய்தி நிறுவனங்கள் நேற்றிரவு வெளியிட்டன.

இந்த நடவடிக்கைக்கு முன்னேற்பாடாக வடக்கில் பெரும் எண்ணிக்கையில் படையினர் குவிக்கப்பட்டுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'கிபிர்' விமானங்கள் நேற்றுக்காலை பருத்தித்துறையில் குண்டு வீச்சு!

வடமராட்சி, ஏப். 19

நேற்றுக் காலை 8.50 மணியளவில் பேரிரைச்சலுடன் வந்த இரண்டு "கிபிர்" குண்டு வீச்சு விமானங்கள், வடமராட்சி வடக்குப் பகுதியை உள்ளடக்கி வட்டமிட்டு பருத்தித்துறை கற்கோவளம் கரையோரக் குடியிருப்புப் பகுதியில் குண்டு வீச்சை மேற்கொண்டன.

ஒன்றுமாறி ஒன்று இரண்டு விமானங்களும் இரண்டு குண்டுகளை அவ்விடத்தில் வீசிப்பறந்தன.

குண்டு வீச்சினை அடுத்து அவ்விடம் சுடுகாடு போலக் காட்சியளித்தது. வெண் மணல் பிரதேசம் கருமணலாக — சாம்பல் பூத்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பல்லாயிரக்கணக்கானோர் நேற்று கலந்துகொண்ட வெண் ஆடைபேரணி

வடமராட்சி, ஏப். 19

வடபகுதி கடற்றொழிலாளர்கள் படும் துன்ப, துயரங்களை சர்வதேசத்துக்கும் தெரியப்படுத்தும் வகையிலும் —

வடபகுதித் தமிழர் மீது ஸ்ரீலங்கா அரசு மீண்டும் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதை தடுக்கும் வகையில் அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச சமூகத்தைக் கோரும் வகையிலும் —

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் அமைப்புகள் ஒன்றிணைந்து வடமராட்சியில் நேற்று மாலை வெண் ஆடைப் பேரணி ஒன்றை நடத்தின.

பல்லாயிரக்கணக்கானோர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். இந்தப் பேரணியில் கலந்து கொண்ட அனைவரும் வெண் நிற ஆடை அணிந்திருந்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ நடவடிக்கையை நிறுத்தி புலிகளுடன் அரசு பேச வேண்டும்

### வெண் ஆடைப் பேரணியின் முடிவில் மகஜர்

சாவகச்சேரி, ஏப். 19

"ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு தங்களின் மேலான நல்லெண்ணத்தை உபயோகித்து அரசை வற்புறுத்துங்கள்"

— நேற்று வடமராட்சியில் நடைபெற்ற வெண் ஆடைப் பேரணியின் போது ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு விலாசமிடப்பட்டு கையளிக்கப்பட்ட மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது

"தமிழ் மீனவர்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3 ஆயிரம் பயணிகள் இன்னும் வவுனியாவில் தடுத்துவைப்பு!

### விசாரணை முடிந்த பின்பே புதியவர்கள் அனுமதி

கொழும்பு, ஏப். 19

வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 3 ஆயிரம் பயணிகளின் விசாரணைகள் முடிவடைந்த பின்பே வவுனியாவுக்குள் புதியவர்கள் அனுமதிக்கப்படுவர் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமைக்குப் பின்னர், தெற்கே செல்வதற்காக வடக்கில் இருந்து சென்ற சகலரும்—

வடக்கே வருவதற்காக வவுனியாவுக்கு வந்தவர்களில் இளம் வயதினரும்—

தொடர்ந்து வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினரால் தேடப்பட்டு வருபவர்களில் ஐந்து பேர் வவுனியா ஊடாக தப்ப முயற்சிப்பதாக கிடைத்த தகவலையடுத்தே படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை— வன்னி மாவட்டத்துக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வரும் லொறிச் சேவை கடந்த 5 நாள்களாக தடைப்பட்டுள்ளது.

சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புக்களின் வாகனங்களும் வவுனியாவுக்குள் செல்ல நடந்து புதன் வரை அனுமதிக்கப்படவில்லை.

(இ-3)

## புறக்கோட்டை பகுதியில் ஐவர் கைது

கொழும்பு, ஏப். 19

புறக்கோட்டை கதிரேசன் வீதியில் பொலிஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது 4 ஆண்களும், பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தற்சமயம் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

(இ-3)

## 4 தினங்களில் 70 பேர் கைது

சாவகச்சேரி, ஏப். 19

கடந்த நான்கு தினங்களில் கொழும்பின் கரையோரப் பிரதேசங்களில் 70 தமிழ் இளைஞர் யுவதிகள் ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

[இ-8]

## ஏறாவூரில் புலிகள் தாக்குதல்

சாவகச்சேரி, ஏப். 13

கடந்த திங்கட்கிழமை ஏறாவூரில் பொலீஸ் காவலரண் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன் போது ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-8)

## அரிசி இறக்குமதி

கொழும்பு, ஏப். 19

கடும் வரட்சியால் நாட்டில் நெற் செய்கை பாதிக்கப்பட்டதை அடுத்து 4 லட்சம் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசு முடிவு செய்துள்ளது. அரிசிக்கான இறக்குமதி வரியும் நீக்கப்பட்டுள்ளது.

(இ-6)

## விமான பீதி ஏற்படுத்திய விபத்து

மந்திகை, ஏப். 19

வடமராட்சிப் பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சின் போது, வட்டமிட்ட விமானத்தை பீதியினால் அண்ணாந்து பார்த்துக்கொண்டே சைக்கிளில் சென்ற இருவர் ஒருவருடன் ஒருவர் மோதியதில் ஒருவர் காயமடைந்தார்.

பருத்தித்துறை சாவகச்சேரி வீதி, துன்னாலைப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் கட்டுவனில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் வசிக்கும் தம்பு திரவியம் (வயது 55) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார்.

(இ-15)

## ஷெல் வீச்சு

மந்திகை, ஏப். 19

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை சுற்றுப்புறக் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை அக் கடற் பிராந்தியத்தில் இருந்து கடற் படையினரின் பீரங்கித் தாக்குதலும் இடம்பெற்றது.

அதிகாலை வேளை இடம்பெற்ற இத் திடீர் தாக்குதல் காரணமாக அடுத்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

(இ-15)

## ஈழப்போர் - 3 தொடங்கி ஒரு வருடம் முடிவடைகிறது

சாவகச்சேரி, ஏப். 19

சந்திரிகா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து —

ஈழப்போர் - 3 ஆரம்பமாகி இன்றுடன் ஒரு வருடம் முடிவடைகிறது.

இராணுவ நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து, தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு பின்னடித்ததால் —

மூன்று மாதங்களாக நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் முறிந்து போயின.

இந்த ஒரு வருட காலத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு பல பின்னடைவுகளும் பாதிப்புக்களும், இழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதிக்கு இன்று மக்கள் திரண்டு அஞ்சலி

சாவகச்சேரி, ஏப். 19

இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிராக அதன் அநியாயப் போக்கை சர்வதேசங்களுக்கும் எடுத்தியம்பும் விதத்திலும், அவ்வேளையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கோரியும்—

32 நாள்கள் உண்ணா நோன்பிருந்து இம் மண்ணுக்காக இன்னுயிர்நீத்த அன்னை பூபதியின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று தமிழீழம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

தென்மராட்சி, வடமராட்சி வன்னிப் பகுதிகளில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள நினைவுப் பந்தல்களில் அன்னையின் திருவுருவப் படத்திற்கு மக்கள் விளக்கேற்றி மலரஞ்சலி செய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கையெழுத்து சேகரிப்பு இயக்கம் ஆரம்பம்

சாவகச்சேரி, ஏப். 19

மறுக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுக்கவும், இன அழிவிலிருந்து எம்மைப் பாதுகாக்கவும், எமது மண்ணில் நாம் நிம்மதியாக வாழவும், எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளவும் அனுமதிக்குமாறு கோரி ஐந்து லட்சம் மக்களிடம் கையொப்பம் பெறும் மாபெரும் கையெழுத்து இயக்கம் நேற்று வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கைதடி ப. நோ. கூ. சங்க தலைமைச் செயலகம், மட்டுவில் சோமஸ்கந்த வாசிகசாலை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, வரணி மகா வித்தியாலயம், பளை மகா வித்தியாலயம் மற்றும் பருத்தித்துறை, நெல்லியடி உட்பட பல இடங்களில் நேற்று காலை 9 மணிக்கு இந்த இயக்கம் ஆரம்பமானது.

அத்தந்தப் பகுதிகளுக்குட்பட்ட பொது அமைப்புக்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் பகுதியிலிருந்து மூவர் தப்பி வந்தனர்

மந்திகை, ஏப். 19

வலிகாமம் பகுதியில் இராணுவத்தினரிடம் சிக்குண்ட மக்களில் மூவர் அப்பகுதியில் இருந்து வெளியேறித் தப்பி வந்துள்ளனர்.

தமக்கு ஏற்பட்டுள்ள சுகவீனத்தை காரணம் காட்டி சிகிச்சைக்காக செல்வதாகக் கூறியே இவர்கள் வெளியேறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அளவெட்டி கும்பிளாவளை பிள்ளையார் கோவிலில் தங்கி இருந்தவர்களான காங்கேசன்துறை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த கந்தையா இராசாத்தி (வயது 40) அளவெட்டியைச் சேர்ந்தவர்களான மனோன் (வயது 28) விமலா (வயது 18) ஆகியவர்களே தப்பிவந்தவர்களாவர்.

இவர்களில் கந்தையா இராசாத்தி என்பவர் கொடிகாமம், மீசாலை வடக்குக்கு வந்து சேர்ந்துள்ளார். ஏனைய இருவரும் கிளிநொச்சிப் பகுதிக்கு சென்றுள்ளனர் என்று அவரால் தெரிவிக்கப்பட்டது.

சுகயீனம் காரணமாக வலிகாமத்தில் சிகிச்சை பெற முடியாத நிலையில், மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்வதாக அனுமதிபெற்று 16 நாள்களுக்குமுன் கோவில் பூசகர் ஒருவருடன் கடல் மார்க்கமாக புறப்பட்ட இவர்கள் மன்னாரில் கரையிறங்கியே வவுனியா ஊடாக வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

## உள்ளூராட்சித் தேர்தல் அரசினால் ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 19

அவசர காலச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

11 மாநகர சபைகளுக்கும், 32 நகர சபைகளுக்கும், 195 பிரதேச சபைகளுக்குமான தேர்தல்கள் மே மாதம் நடைபெற இருந்தது தெரிந்ததே.

இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முடிவு செய்துள்ளார்.

(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வயலின், ஹீரோ சைக்கிள், 12V பற்றறி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. சண்முகராசா, C/o க. இராசரத்தினம், மீசாலை கிழக்கு, சியோன் தேவாலயம் அருகாமை, மீசாலை. (41400)

4''x3'' அளவுள்ள கிராந்திக் குற்றிகள் - 200', 25 இந்தியன் வில்லியஸ் நீர் இறைக்கும் இயந்திரம் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இராஜபிரதீபன், C/o V. விசுவநாதர், கைதடி கிழக்கு, கைதடி. (41601)

### தேவை

இரண்டு சக்கர உழவு இயந்திர டீசல் என்ஜின் தேவை. தொடர்பு: கி. தனபதி, கிராம்புவில், பருத்தித்துறை வீதி, சாவகச்சேரி. (41543)

### வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம். பீங்கான், ரம்ளர், தண்ணீர் ரம்ளர், ஐஸ்கிறீம் கப்ஸ், பிளாஸ்ரிக் பாய்கள், சில்வர் றே, கறி வாளிகள், கறி டிஸ்கள், பந்திப்பாய், கிடாரங்கள், சமையல் பாத்திரங்கள், தண்ணீர் பரல் இன்னும் பல. வெள்ளை மாளிகை, பெரிய அரசடி, சங்கத்தானை. (41147)

### தொழிற்கல்வி

றேடியோ; ரி. வி., வி. சி ஆர் மற்றும் சகல விதமான மின் உபகரணங்களைத் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். விவரங்கட்கு:செ.சுபாஸ், Institute of Electronics, நுணாவில் சந்தி அருகாமை, சாவகச்சேரி. (41398)

---

வலிகாம மாணவர்களுக்கான
**காலை, மாலை இரு நேர வகுப்புகள்: ஆண்டு 5 — 11 வரை**

பிற்மன் கல்வி நிறுவன ஆசிரியர்களும், யாழ். முன்னணி ஆசிரியர்களும் இணைந்த சேவை.
வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.
நெல்லியடியில்
மத்திய மகாவித்தியாலய வீதியில்

**யாழ். நியூ சயன்ஸ் அக்கடமி**

(40442)

---

சென் பற்றிக்ஸ் கல்லூரி முன்னாள் அதிபர்
## அருட்தந்தை லோங் அடிகளின்
## பிறந்ததின நூற்றாண்டு நினைவுத் திருப்பலி

**21 - 04 - 96** ஞாயிறு காலை 9-00 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலஸ் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இவ்வறிவித்தலை சம்பத்திரிசியார் சமூகத்தினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''அன்னை அகம்''
புலோலி தெற்கு,
பருத்தித்துறை.

பி. பெனடிக்ற்,
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

அன்பளிப்பு:

**லாவண்யா**
**பல் மூக்குக் கண்ணாடி அகம்**
நெல்லியடி — சாவகச்சேரி — கிளிநொச்சி

(41554)

---

## ஏற்றமிகு அன்னைக்கு எட்டாமாண்டு அஞ்சலிகள்

கடல் கடந்து வந்திங்கு
கழுத்தறுக்க முனைந்தவர்க்கு
உடல் வருந்த நின்றுறுதி
உயர்வு சொன்ன தற்கொடையே!
தடம் புரளாத் தனயரணி
தமையீந்துன் கொள்கை வெல்லும்
திடம் ஈது அமைதிகொள்க
தீந்தமிழே அஞ்சலித்தோம்.

**அன்னை பூபதிக்கு
எம் அஞ்சலிகளை ஈகின்றோம்**

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

(41557)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 17—09—1920 — ஆண்டவன் அடியில் 20—03—1996

**திருமதி வேதநாயகம் தியாகராசா**

எங்கள் அன்னையே அன்புத் தெய்வமே
உம் வற்றாத பாசத்தையும் அயராத
அரும் பெருஞ் சேவையையும்
என்றென்றும் நாம் மறவோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றென்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''பராசக்தி வாசா''
கைதடி கிழக்கு,
கைதடி.

(41555)

---

நவீல்ட் பாடசாலை
## இரண்டாம் தவணை ஆரம்பம்

கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை இரண்டாந் தவணைக்காக **22- 04- 96** (திங்கட்கிழமை) திறக்கப்படுகின்றது. சகல மாணவர்களும் சமூகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

க. கோபாலகிருஷ்ணன்
அதிபர்.

(C/4200)

---

யாழ். பல்கலைக்கழக மூதவை, பேரவை அங்கத்தவர்களுக்கான
## அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக மூதவை, பேரவைக் கூட்டங்கள் முறையே **24- 4- 96** புதன்கிழமை முற்பகல் **9. 30** மணிக்கும், **25- 04- 96** வியாழக்கிழமை முற்பகல் **9. 30** மணிக்கும் கைதடி சித்த மருத்துவத் துறையில் நடைபெறும். மூதவை, பேரவை அங்கத்தவர்கள் இவ்வறிவித்தலை ஏற்று மேற்படி கூட்டங்களுக்கு தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்

(C/4201)

---

தாவடி ஸ்ரீ வடபத்திரகாளி
## அம்பாள் தேவஸ்தானம்

அம்பாள் அடியார்களே,

மேற்படி தேவஸ்தான மஹோற்சவ காலம் 19 - 04 - 96 வெள்ளிக்கிழமை முதல் 03 - 05 - 96 வெள்ளிக்கிழமை வரையாகும். இவ்மஹோற்சவ காலங்களில் அம்பாள் அடியார்கள் விரதமனுஷ்டித்து அமைதியான வாழ்வு ஏற்பட பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்
ஆலய முகாமையாளர்,
கண்ணன் ஐயா, ரவி ஐயா.

வட பத்திரகாளி தேவஸ்தானம்,
தாவடி.

(41553)

---

யாழ். கனகரத்தினம் ம. ம. வி
## நிர்வாக சபைக் கூட்டம்

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகக் குழுக் கூட்டம் எதிர் வரும் **21 - 04 - 96** ஞாயிறு மு. ப. 10-00 மணிக்குதபால் நிலைய வீதியில் அமைந்திருக்கும் சாவகச்சேரி மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற உள்ளதால் நிர்வாக சபை அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

வி. மாணிக்கம்
அதிபர்

பொன். தர்மேந்திரன்
ப — செயலர் - ப.மா. சங்கம்

(41603)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி சர்வானந்தம் நிஸாலி**

மலர்வு: 01 — 10 — 1992
உதிர்வு: 02 — 05 — 1995
திதி: 19 — 04 — 1996

சின்ன மொட்டு மலர்ந்து நின்று
சிரித்தே சேதி சொல்லும் என்று
எண்ணி எண்ணிக் காத்திருந்தோம்;
நித்திரை தான் செய்தாயோ?
நிஸாலியே எழும்பம்மா!
நீ சிரித்து நீ அழுது
நடை பயின்று மொழி பயின்று,
இங்கிருந்த நாள் மறைந்து
ஆண்டொன்றும் ஆனதம்மா
ஆண்டொன்று ஆனாலும்
ஆயிரமே வந்தாலும்
ஆறாது எம் வேதனைகள்
அணையாது உன் ஞாபகங்கள்
ஆசை மகளே! அன்புத் தங்கையே! - உன்
அன்பு வதனம் நாம் காண்பதெப்போ?
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை-
வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் வாடும்,
அப்பா, அம்மா, அண்ணாமார்,
குடும்பத்தினர்.

வி. சர்வானந்தம்
கற்கோவளம்,
பருத்தித்துறை.

(40428)

---

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

இறப்பு: 06 — 03 — 1996



45 ஆம் நாள்: 19 — 04 — 1996

**அமரர் க. திருநாவுக்கரசு**
அவர்கள்

(பிரதம முகாமையாளர் — இலங்கை வங்கி உள்ளகக் கணக்கு ஆய்வுப்பகுதி — கொழும்பு)

வங்கிக்காய் வாழ்ந்திட்ட ஆசான் அவன் இலங்கை
வங்கியே அவனது பேச்சும் மூச்சும்
இங்கெம்மைப் பிரிந்திட்ட தினமோ மார்ச்சாறு
இவன் தான் 'திரு' எனும் 'நாவுக்கரசு'
பொங்கும் விழிகளில் நீரும் மல்க
பெம்மான் அவன் பதம் சேர்ந்த நாளில்
வங்கி ஊழியர் நாம் சேர்ந்து கரம்
கூப்பித் தொழுகின்றோம் — நாற்பத்தைந்தில்.

இவரது திடீர் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதான முகாமையாளர்,
வங்கி ஊழியர்களும்,
இலங்கை வங்கி,
யாழ். மேற்றரக்கிளை.

(41399)

---

உ
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக
### வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள்
## கொடியேற்ற தினம் இன்று

வண்ணை வாழ் காமாட்சித் தாயே
இன்று உன் மகோற்சவத் தொடக்கம் தாயே
உன் திருவிழாக் காலம் என்றால் காமாட்சித் தாயே
வண்ணை நகரமே இசைக்கோலம்
போன்றிருக்கும் தாயே
இன்று இல்லை உன் தொண்டர்கள் அங்கு
காமாட்சி தாயே
உன்னை விட்டுப் பிரிந்து வரும்போது தாயே
எங்கள் உள்ளக் குமுறல்கள் உனக்குத் தெரியும்
காமாட்சி தாயே
வண்ணை வாழ் பக்தர்கள் உன்னை விட்டுப்
பிரிந்து தாயே
நாட்கள், மாதங்கள் ஆகிவிட்டது காமாட்சி தாயே
வருடங்களாக மாறாமையிருக்கத் தாயே
பகை விரட்டி, உன்னிடம் வரக் காமாட்சி தாயே
எங்கள் வேங்கைகளுக்கு அருள் புரிவாய் தாயே
தலைவன் காலத்தில் தமிழீழம் அமைக்க
அருள்வாய் காமாட்சி தாயே.

விளம்பர அன்பளிப்பு:
**தரமான தங்க நகைகளுக்கு**
**கவியரசு நகைத் தொழிலகம்**
வட்டக்கச்சி சந்தையடி,
கிளிநொச்சி.

(40512)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஓய்வூதியர் அவலங்கள்

வடபகுதி வாழ் ஓய்வூதியர்கள் எப்போதுமே ஏதோ ஒரு பிரச்சினையை அல்லது கஷ்டத்தை எதிர்நோக்கும் குழுப்பினராக இருந்து வருகின்றனர்.

ஓய்வூதியம் பெறுவதற்கான வவுச்சர்கள் கிடைப்பதில் தாமதம், அதற்கான கட்டுநிதி வந்து சேராமை, வவுச்சர்கள் ஓய்வூதியர்களின் கைக்குக் கிடைப்பதில் தாமதம், ஓய்வூதியம் காசாகக் கிடைக்காமலே காசோலைகளை மாற்றுவதற்கு அலைதல் என்று ஏதோ ஒரு பிரச்சினை எப்போதும் எழுந்து கொண்டே இருக்கிறது.

அந்த வகையில் வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி, வன்னிப் பகுதிகளில் இப்போது வதியும் ஓய்வூதியர்களுக்கு அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் கிரமமாகவும், சீராகவும் கிடைப்பதில்லை என்று குறை தெரிவிக்கப்படுகிறது.

தாம் அந்தப் பக்கமும், இந்தப்பக்கமும் அடிவாங்கும் மத்தளம் போன்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவே அவர்கள் தமக்குள் உணருகிறார்கள்.

1990 ஆம் ஆண்டில் தமிழ்ப் பகுதிகள் மீது போர் தொடுத்த பின்னர், கொழும்பு அரசாங்கமும் அதிகாரிகளும் தமிழ் மக்களை எல்லா வழிகளாலும், வகைகளாலும் கஷ்டமுற, இன்னலுற வைக்கிறார்கள். தமிழர்களின் அடிப்படை வாழ்க்கை வழிகளை உடைத்து அவர்களை நிர்க்கதிக்குள்ளாக்கும் நோக்குடன் செயலாற்றுகிறார்கள்.

அந்த வகையில் ஓய்வூதியர்களுக்குரிய வசதிகளைச் செய்யும் பொறுப்பையும் அரசு செவ்வனே நிறைவேற்றுவதில் பின்னிற்கிறது. அதுவே தமிழ் ஓய்வூதியர்கள் தமக்குரிய கொடுப்பனவைப் பெறுவதில் எதிர்நோக்கும் கஷ்டங்களுக்கும் சிரமங்களுக்கும் பெருமளவு காரணம்.

ஆனால் இந்தப் பக்கத்திலும் தமது விவகாரத்தில் அக்கறையுடன் செயற்படுவதில்லை என்ற உணர்வு ஓய்வூதியர்கள் மத்தியில் விரவிக் காணப்படுகிறது.

இது உண்மையில் கவலைக்குரியதும், கண்டிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

தாங்களும் ஒரு காலத்தில் ஓய்வூதியர்களாக மாறுவார்கள் என்பதனை மறந்தா இங்குள்ள அதிகாரிகள், மற்றும் ஊழியர்கள் எமக்குக் கஷ்டங்களைத் தருகிறார்கள் என்று மனம் வெந்து கேட்கிறார்கள் ஓய்வூதியர்கள்.

ஆகப் பிந்தி—

வங்கியிலேயே வவுச்சரைப் பெற்று அங்கேயே பணத்தைப் பெறுவதற்கு இருந்த ஒழுங்கு மாற்றப்பட்டதை—

இங்குள்ள அதிகாரிகளுக்கு தம்மீது அக்கறை இல்லை என்பதற்கு ஓர் உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார்கள் வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த ஓய்வூதியர்கள்.

நெருப்பில்லாமல் புகைவது இல்லை. எனவே இங்குள்ள அதிகாரிகள், இப்பகுதி வாழ் ஓய்வூதியர் விவகாரத்தில், அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற உள்ளுணர்வுடன்—

அவர்கள் தங்கள் தாய், தந்தையர்கள், பேரன்மார்கள் என்று கருதி அவர்களுக்கு உதவ வேண்டும்.

ஓய்வூதியர்களில் பெரும்பாலானோர் தமக்கும், தம்மைச்சேர்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கும் ஓய்வூதியத்தையே ஜீவனோபாயமாக நம்பி இருக்கிறார்கள். தள்ளாத வயதில் அவர்களுக்கு சிரமம் கொடுப்பதும், கஷ்டம் விளைவிப்பதும் மனிதாபிமானமற்றது.

எங்களிடம் மனித நேயம் இல்லாமல் இருந்தால் சிங்கள அரசிடம் இருந்து அதனை நாம் எதிர்பார்க்க முடியாது.

குருத்தோலைகள் ஒருபோது காவோலைகளாக மாறியே ஆக வேண்டும் என்பது இயற்கையின் நியதி.

# திணைக்கள தலைவர்களை சந்திக்க தவம் கிடக்கும் அரச அதிகாரிகள்

சாவகச்சேரி, ஏப். 19

கொழும்பில் உள்ள அரச திணைக்களங்களுக்கு சென்று மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத நிலை வடபகுதி அரச அதிகாரிகளுக்கு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி அரச அதிகாரிகள் அரச திணைக்களங்களுக்கு சென்றால், பல மணி நேரம் காத்திருந்தே திணைக்களத் தலைவரை சந்திக்க வேண்டி உள்ளதாகவும் —

சில சமயம் சந்திக்க அனுமதி மறுக்கப்படுவதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

இந்த கெடுபிடி நடவடிக்கையால் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமலே வடக்கு திரும்ப வேண்டிய நிலை வடபகுதி அரச அதிகாரிகளுக்கு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

## தனது இரு புதல்வர்களை போரில் இணைத்த தாயார்

ஒரு மாதகால இடைவெளியில் தாயார் ஒருவர் தனது இரண்டாவது மகனையும் விடுதலைப் போராட்டத்தில் இணைத்துள்ளார்.

வல்வெட்டித்துறை திருவிலில் இச்சம்பவம் இடம் பெற்றது.

சு. ஞானசவுந்தரி என்ற இந்த தாயார் தனது இரண்டாவது மகன் ரமணன் என்பவரை பருத்தித்துறை வட்டச் செயலகத்தில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் இணைத்தார்.

இத் தாயார் இரு வாரங்களுக்கு முன்னர் இன்பருட்டியில் நடைபெற்ற போர்ப் பிரகடன எழுச்சிக் கூட்டத்தில் தனது முதலாவது மகனையும் போராட்டத்தில் இணைத்திருந்தார்.

(இ-173)

## நிரந்தர நியமனம்

தொண்டர் ஆசிரியராக கடமையாற்றி பின்னர் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

நிரந்தர நியமனம் வழங்குவதற்காக கல்வித் திணைக்களம் அத்தகைய ஆசிரியர்களிடம் விவரங்களைக் கோரியுள்ளது.

இந்த விவரங்களை பெறுவதற்கான படிவங்களை நாளை வெள்ளிக்கிழமை வலயம் ஒன்று அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## ரெலோ உறுப்பினர் சுட்டுக்கொலை

கோரளைப் பற்று மேற்கு, ஓட்டமாவடிப் பிரதேச சபை உறுப்பினரும் ரெலோ அங்கத்தவருமான அசோகன் என்பவர் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

வாழைச்சேனை நகரில் கடந்த ஞாயிறன்று இச்சம்பவம் இடம்பெற்றது.

இவருடன் சென்ற மற்றொரு ரெலோ உறுப்பினரான ரபாகரன் என்பவர் காயங்களுடன் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது ஒரு கால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனையில் உள்ள ரெலோ காரியாலயத்துக்கு இருவரும் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் இந்தத் துப்பாக்கிச் சூடு இடம் பெற்றது.

இச்சம்பவத்தை அடுத்து நகரில் உள்ள கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. நகரம் வெறிச்சோடியது.

(இ)

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கேட்டுள்ளது.

★ வினாசித்தம்பி நடேசபிள்ளை — சிவன் கோவில் வீதி, மட்டுவில் வடக்கு.
★ முத்துராசா சதாசிவதேவி — அல்லாரை தெற்கு, மீசாலை.
★ கிருஸ்ணதேவி தவபாலன் — மே/பா. M செல்லத்துரை, உபதபால் நிலையத்திற்கு அருகில், மட்டுவில் தெற்கு.
★ கமலா பாலசிங்கம் — மே/பா S. விஜயரட்ணம், சித்தமாவடி ஒழுங்கை, கல்வயல்.
★ செல்லத்துரை தங்கரத்தினம் அல்லது செல்லத்துரை கவிதா — பாலாவி தெற்கு, கொடிகாமம்.
★ நாகலிங்கம் பொன்னுத்துரை — தூரிக்காடு ஒழுங்கை, சாவகச்சேரி.
★ கோவிந்த ரத்தினசபாபதி — சிவன் கோவிலடி, மட்டுவில் தெற்கு.
★ அ. இராசையா — மே/பா K. சண்முகநாதன் பெரிய அரசடி வீதி, சாவகச்சேரி வடக்கு.
★ தங்கம்மா குமாரசிங்கம் — மே/பா M.S. கந்தையா, இடைக்குறிச்சி, வரணி.
★ Dr. M. கனகசிங்கம் — மே/பா சிறிகாந்தன், Moter Cycle Technician, நுணாவில்.
★ நடராஜா சூரியநாதன் — இலங்கை வங்கி, சாவகச்சேரி.
★ நாகம்மா கந்தசாமி — கண்டி வீதி, மீசாலை வடக்கு.
★ சந்திரா செல்லையா — மே/பா கோ. சின்னத்தம்பி (பண்டிதர்), இயற்றாலை, வரணி.
★ சண்முகம் ஜெகசோதிராஜா — மே/பா A. மார்க்கண்டு, சப்பச்சி மாவடி, சாவகச்சேரி.
★ சுவர்ண மாலினி சண்முகம் — மே/பா A. மார்க்கண்டு, சப்பச்சி மாவடி, சாவகச்சேரி.
★ தம்பு தம்பையா — எழுதுமட்டுவாள் வடக்கு.
★ கமலாதேவி பஞ்சலிங்கம் — மே/பா M. ஐயாத்துரை, மீசாலை கிழக்கு.
★ கார்த்திகா செல்வறஞ்சன் — மே/பா P. சந்திரகுலசிங்கம், G. T. M. பாடசாலை ஒழுங்கை, சரசாலை வடக்கு.
★ பரஞ்சோதி ஜெகசோதி — மே/பா கணபதிப்பிள்ளை சின்னையா, கச்சாய் தெற்கு.
★ பவளராணி சுந்தரமூர்த்தி மே/பா கணபதிப்பிள்ளை சின்னையா, கச்சாய் தெற்கு.
★ பரமேஸ்வரி கந்தசாமி — மே/பா பற்குணநாதன் 1 ஆம் கட்டையடி, கல்வயல்.
★ ஆறுமுகம் சிவராசா — மே/பா வைத்திலிங்கம், பசுபதி வீதி, மறவன்புலம்.
★ பாலயோகன் கமலாம்பிகை — S.M.O அலுவலகம், சாவகச்சேரி.
★ சிவலிங்கநாதன் சரஸ்வதி—மே/பா குமாரசாமி, பிள்ளையார் கோவிலடி, நாவற்குழி மேற்கு.
★ நாகரத்தினம் சிவபாக்கியம் — தெனியான் ஒழுங்கை, மட்டுவில்
★ வல்லிக்குட்டி ஜெயம் — ஜெயந்தி மரக்காலை (Timber Dept), கண்டி வீதி, பளை.
★ ரத்தினம் சவுந்தரம் — 161, கண்டி வீதி, சங்கத்தானை.
★ கனகசபை குமாரசாமி — விக்னேஸ்வராக் கல்லூரிக்கு அருகாமையில், டச்சு வீதி, மீசாலை மேற்கு.
★ விஸ்வலிங்கம் செல்வநாயகம் — மே/பா S. தர்மலிங்கம், சாவகச்சேரி.
★ செல்வராணி சூசைப்பிள்ளை — கச்சாய் வீதி, சாவகச்சேரி.
★ விக்னேஸ்வரி பொன்னுத்துரை — கச்சாய் தெற்கு, கொடிகாமம்.
★ ரட்ணராணி சிறிஸ்கந்தராஜா— மே/பா K. முருகப்பா, கச்சாய் வடக்கு.
★ அருள்ராணி கோவிந்தபிள்ளை — மகளிர் கல்லூரி வீதி, கற்குழி, சாவகச்சேரி.
★ தவமணி குணசிங்கம் — மே/பா தேவராசா, கல்வயல் வீதி, நுணாவில் கிழக்கு.
★ ஆசீர்வாதம் யூதாதேயுபிலீப் — பாடசாலை வீதி (அருள் வீதி), நாவற்குழி.
★ செபஸ்தியாம்பிள்ளை இமானுவேல் அல்லது திரேசம்மா இம்மானுவேல் — மே/பா யோகசுந்தரம், மீசாலை தெற்கு.
★ வள்ளிநாயகி இராசலிங்கம் அல்லது இராசலிங்கம் முருந்தன் — மே/பா கதிரேசு ஆசிரியர், சங்கத்தானை.
★ பசுபதி செல்லம்மா— மே/பா கணபதிப்பிள்ளை, மீசாலை தெற்கு.
★ சுப்பையா நல்லையா — மே/பா வதனா சின்னத்தம்பி, வேம்பிராய், மீசாலை வடக்கு.
★ இலங்கைநாயகி மரியநாயகம் — புத்தூர்ச் சந்தி, மீசாலை.
★ T. H. ஜெனி கொலஸ்ரிகா — மே/பா N. சின்னத்தம்பி, நுணாவில் மேற்கு.
★ செல்லர் குலசேகரம் — மே/பா V. நடேசபிள்ளை, சிவன் கோவில் றோட், மட்டுவில் வடக்கு.
★ துரைசிங்கம் பாக்கியரத்தினம் — மே/பா பரமசிவம், மீசாலை வடக்கு.
★ மகேஸ்வரன் பவளராகினி— மே/பா S. தனபாலசிங்கம், குடகியன், வரணி.
★ கருணாகரன் ஞானசக்தி — ரீச்சர் லேன், சங்கத்தானை.
★ செல்லம்மா கந்தையா — மே/பா வீரசிங்கம், வைரவர் கோவிலடி, மட்டுவில் தெற்கு.
★ சு. ஜெகசோதி அல்லது க. சுந்தரலிங்கம் — செல்வப்பிள்ளையார் கோவிலடி, மட்டுவில் வடக்கு.
★ V. K. A. நடராசா — மே/பா யோகசிங்கம், 82/4, தபால்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ நாராயணப்பிள்ளை அருணகிரிநாதன் — மே/பா M. தங்கவடிவேல், மட்டுவில்.
★ லோகநாயகி ராமஜெயம் — கச்சாய் தெற்கு, கொடிகாமம்.
★ தங்கம்மா அப்பாக்குட்டி — மே/பா G. K. ஈசன், உசன், மிருசுவில்.
★ ந. குமரசிறி அல்லது ந. சரஸ்வதி — மே/பா கந்தசாமி, நுணாவில் சந்தி, நுணாவில் மேற்கு.
★ ஜெயராசா ஜெயசீலன் — மீசாலை வடக்கு, மீசாலை.
★ தயாராணி அருந்தவம் (யோகநாதன்) — மட்டுவில் பண்டித்தளச்சி அம்மன், புத்தூர்.
★ ஜெயானந்தன் யோசப் — R. C. கொன்வென்ற், மிருசுவில்.
★ N. கனகநாயகம் — காளிகோவில் வீதி, கொடிகாமம்.
★ கந்தர் தம்பிராஜா — மே/பா ச. கந்தையா, விஷ்ணுமோகன் வீதி, மட்டுவில் வடக்கு.
★ கந்தையா ஜெயராஜசிங்கம் அல்லது தவமணி ஜெயராஜசிங்கம் — மே/பா B. சிவபாதசுந்தரம், தோப்பர் வீதி, மீசாலை வடக்கு.
★ புஸ்பாவதி சிவசாமி — மே/பா K. விமலதாஸ், "சிவலோகம்", உசன், மிருசுவில்.
★ செல்வானந்தம் பிறேமா — நுணாவில் சந்தி, சாவகச்சேரி.
★ கனகம்மா துரைராஜா — மே/பா தவசீலன், புகையிரத வீதி (கண்டி வீதி), இழுத்தம், மட்டுவில்.
★ செல்வநிதி ரட்ணம் — மே/பா கந்தையா ரட்ணம், நுணாவில் சந்தி, கைதடி.
★ ஜோசேப் தருமராசா — மே/பா கணபதி பரமசாமி, சரசாலை வடக்கு.
★ ஜோசேப் செல்வராணி — மே/பா கணபதி பரமசாமி, சரசாலை வடக்கு.
★ கந்தையா பேரின்பநாதன் — மே/பா துரைசிங்கம், கைதடி, நாவற்குழி தெற்கு.
★ கணேசு கோபாலசாமி — மே/பா சிதம்பரநாதன், சங்கம் வீதி, சங்கத்தானை.
★ லீலாவதி நடேசபிள்ளை — மே/பா சு. சந்திரன், சடையர் தோட்டம், வேம்பொடு கேணி, பளை.
★ செல்வராணி கந்தசாமி — மிருசுவில் வடக்கு, மிருசுவில்.
★ உதயராணி கந்தசாமி — மிருசுவில் வடக்கு, மிருசுவில்.
★ அன்னம்மா செல்லத்துரை — தாவடி தெற்கு, கொடிகாமம்.
★ வெற்றிவேல் தேவசீலன் — மே/பா மா. தேவராஜா, தாவாளை, இயற்றாளை, கொடிகாமம்.
★ சரஸ்வதி பொன்னுத்துரை — கண்டுவில் ஒழுங்கை, டச்சு வீதி, சாவகச்சேரி.

## நெல்லியடிக்கு அழைக்கப்பட்டோர்

கீழ்க்குறிப்பிடுவோரை முதன்மைச்சாலை நெல்லியடியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ சாந்தலக்சுமி செல்லத்துரை — ஒடை, அல்வாய் தெற்கு.
★ அருந்ததி செல்வரட்ணம் — மே/பா கந்தையா வல்லிபுரம், அல்வாய் வடக்கு.
★ வல்லிபுரம் யோகநாதன் — மே/பா வேலுப்பிள்ளை, கரவெட்டி தெற்கு.
★ நாராயணபிள்ளை — மே/பா வேலுப்பிள்ளை, கரவெட்டி தெற்கு.
★ நாகம்மா நடராஜா அல்லது க. விசுவலிங்கம் — 'விஜயா இல்லம்', கரவெட்டி மேற்கு.
★ பாக்கியலட்சுமி வேலாயுதபிள்ளை — மே/பா K. சிறிமுருகன், விக்னேஸ்வரா வீதி, செல்வம் மில் அருகில், கரவெட்டி கிழக்கு.
★ நீலாதாட்சி அம்மா வேலுப்பிள்ளை — மே/பா இந்திரா சேனாதிராஜா, தரிக்காப்பட்டு, வதிரி, கரவெட்டி.
★ அ. வாமதேவன் அல்லது பாலசுந்தரி வாமதேவன் — மே/பா சிவகுரு, அரசடி வீதி, ஆத்தியடி, வடமராட்சி.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழப்போர்–3...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் ஸ்ரீலங்கா படையினர் ''சூரியப் பிரகாசம்'' என்ற பெரும் படையெடுப்பை நடத்தி வலிகாமத்தை ஆக்கிரமித்தனர்.

எனினும் அங்கு வாழ்ந்த ஐந்தரை லட்சம் மக்களும் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்ததால் அரசுக்குப் பெரும் அரசியல் தோல்வி உண்டானது.

இப்போது மக்கள் இல்லாத வெறும் வலிகாமத்தில், 40,000க்கும் மேற்பட்ட துருப்புகளைக் குவித்து வைத்துக் கொண்டு அவர்களைப் பராமரிப்பதற்கும், பாதுகாப்பதற்குமாக கோடிக் கணக்கான ரூபா பணத்தை வீணே செலவிட்டு வருகிறது.

இராணுவத்தை வாபஸ் பெற்று, மக்கள் மீண்டும் சென்று குடியமர அனுமதிப்பது, தனது தோல்வியை ஒப்புக்கொள்வதாக முடியும் என்ற கௌரவப் பிரச்சினையை தூக்கிப் பிடித்துக் கொண்டு நிற்கிறது.

போதாக் குறைக்கு, குடாநாடு முழுவதையும் ஆக்கிரமிப்பதற்காக மற்றொரு பெரும் இராணுவ நடவடிக்கைக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

ஈழப்போர் மூன்று வடக்கு—கிழக்குக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. விடுதலைப் புலிகள் அதனைத் தென்னிலங்கைக்கும் விஸ்தரித்துள்ளார்கள்.

கொலன்னாவ எண்ணெய்க் குதம், மத்திய வங்கி, கொழும்புத் துறைமுகம் ஆகிய கேந்திர பொருளாதார இலக்குகளைத் தாக்கி விடுதலைப் புலிகள் அரசுக்கு பெரும்சவால்விடுத்துள்ளனர்

வடக்கில் இராணுவத்துக்கான விநியோகத்தைத் தடுக்கும் விதத்தில் பல விமானங்கள், கப்பல்கள் ரோந்துப் படகுகள் என்பனவற்றையும் இந்த ஒரு தருடத்தில் விடுதலைப் புலிகள் தாக்கி அழித்துள்ளனர்.

அரசாங்கம், வெல்ல முடியாத ஒரு போரில் ஈடுபட்டு, சிக்குண்டு நாட்டில் இரத்த ஆறை ஓடச் செய்வதோடு —

போருக்காகப் பெரும் பணத்தைச் செலவு செய்து நாட்டின் பொருளாதாரத்தை சீரழிப்பதோடு —

விடுதலைப் புலிகளின் தாக்குதலால் பெரும் பொருளாதார வீழ்ச்சி நிலையையும் அடைந்து வருகிறது.

எனினும் போரை நிறுத்த விரும்பமின்றி —

சமாதானத்துக்கான போர் என்று கூறி தமிழர்களை அழிக்க முற்பட்டு நிற்கிறது.

அதேவேளை—

தான் ஒரு சமாதான விரும்பி என்று காட்டுவதற்காக, பெயருக்காக, அரசியல் தீர்வு யோசனை ஒன்றையும் முன்வைத்து, அதுவுமில்லை இதுவுமில்லை என்று நிலை குலைந்து நிற்கிறது.

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மலாயன் சாண்டோ நடராசா
உடற்பயிற்சி நிலையம், பருத்தித்துறை

(1) 2546 (2) 1875 (3) 269

ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 561. | 2918. | 1141. | 1834. |
| 123. | 2133. | 639. | 75. |
| 923. | 2105. | 1705. | 909. |
| 113. | 2163. | 965. | |

(40443)

## மரண அறிவித்தல்கள்

அரியாலையூர் கவிஞர்

### வேலுப்பிள்ளை ஐயாத்துரை

அரியாலை ஸ்ரீசரஸ்வதி அம்பாள் ஆலய பரிபாலகரும், யாழ். இலக்கிய வட்ட மூத்த உறுப்பினரும், கம்பன் கழகத்தால் மூதறிஞர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவரும் இளைப்பாறிய தொல்பொருள்திணைக்கள ஊழியருமாகிய வேலுப்பிள்ளை ஐயாத்துரை 18 - 04 - 96 அன்று காலமாகிவிட்டார்.

இவர் மகாலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராசாவின் அன்புச் சகோதரனும், வரதராஜா (யாழ். செயலகம்), ஜெயபாரதி, ஜீவதாசன் (யாழ். தொல்பொருள் திணைக்களம்), அபிராமி, வாணிதாசன் (ஜேர்மனி), முருகதாசன் (யாழ் போதனா வைத்தியசாலை), குமரதாசன் (நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), காலஞ்சென்ற குகதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதாசன் (ஒய்வு முகாமையாளர் விற்பனைத் திணைக்களம் - வவுனியா), இந்திராணி [யாழ். மாநகரசபை], மகேந்திரராஜா [யாழ். போதனா வைத்தியசாலை], ரஜனி, ரமணி [ஜேர்மனி], ஜெயகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், தங்கம்மா, இரத்தினம் (நடிகமணி), சிவபாக்கியம், மதுரவேணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19-4-96) காலை 10-00 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
ஐ. வரதராஜா,
59, கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தற்காலிக முகவரி:
''கவிதா நிதி'',
கவிஞர் செல்லையா வீதி,
(தேவரையாளி இந்துக்கல்லூரிக்கு அருகில்)
அல்வாய் தெற்கு, அல்வாய். (41556)

### வேலாயுதம் குமாரசுந்தரம்

(புகையிரதப் பகுதி ஒய்வு பெற்ற இலிகிதர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் குமாரசுந்தரம் கொழும்பில் காலமானார்.

அன்னார் தர்மவதியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி) அன்புக் கணவரும், தேன்மொழி (லங்காசிமெந்து), தனபாலினி (ஆசிரியை), விக்கின்ராஜா (லண்டன்), யோகசுந்தரி (ஆசிரியை), நர்மதா ஆகியோரின் அன்புத் தந்தையும், குகமூர்த்தி, சகாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் மனோஜிதாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 34/20, தட்சிணாமூர்த்தி வீதி, கல்கிசையில் அவர் இல்லத்தில் (18-04-96) வியாழக்கிழமை இடம் பெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மா. வைத்தீஸ்வரன்
(மருமகன்)
மாவிட்டபுரம். (40444)

## குடாநாட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இதற்கிடையில்—

வடக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படின் நாட்டின் வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாமல் தெற்கிலும் பழிவாங்கும் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்துவர் என்றும் வெரித்தாஸ் குறிப்பிட்டது.

வடக்கில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படின் அதற்குப் பழிவாங்குவதற்காக வடக்குப் படையினருக்கான விநியோக மார்க்கங்களைத் தடை செய்யும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் என விடுதலைப் புலிகளின் சர்வதேச அலுவலகப் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் ''ரோய்ட்டர்'' செய்தி நிறுனத்துக்கு தெரிவித்ததாகவும் வெரித்தாஸ் அறிவித்தது.

இதனிடையே—

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களினால் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியில் மக்கள் நெரிசலாக வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பமாகி வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி குடியிருப்புகள் மீது ஸ்ரீலங்காப் படைகள் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தினால் அநியாய உயிரிழப்புகள் பெருமளவில் ஏற்படும் என அஞ்சப்படுகின்றது.

இதனைத் தவிர்ப்பதற்காக வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து மக்கள் — பாதுகாப்புக்காக — வன்னி பெருநிலப்பரப்புக்கு இடம்பெயர்ந்து செல்வது நல்லது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் ஆலோசனை தெரிவித்துள்ளன.

பாதுகாப்புக்காக வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடம்பெயரும் மக்களுக்கு உதவும் நோக்குடன் இலவச போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் வழங்கி வருகின்றனர். (உ-6-7-8)

## பல்லாயிரக்கணக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று மாலை 4 மணிக்கு வடமராட்சி வடக்குப் பிரிவு கடற்றொழிலாளர் மாலுசந்திப் பிள்ளையார் கோவில் முன்றலில் இருந்தும் —

வடமராட்சி கிழக்குப் பிரிவு கடற்றொழிலாளர் புலோலி உபயகதிர்காம ஆலய முன்றலிலிருந்தும்—

தென்மராட்சி மற்றும் ஏனைய பிரிவு கடற்றொழிலாளர் துன்னாலை இந்திரன் அம்மன் கோவில் முன்றலில் இருந்தும் —புறப்பட்டு மந்திகைச்சந்தியில் மாலை 5 மணிக்கு ஒன்றிணைந்து இந்த பேரணியை நடத்தினர்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் அரச அட்டூழியங்களுக் கெதிரான கோஷங்களை எழுப்பினர்.

அரச எதிர்ப்பு சுலோகங்களையும் இவர்கள் எடுத்து வந்தனர்.

பேரணி மந்திகையில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தை சென்றடைந்ததும் தூதரக வதிவிடப் பிரதிநிதியிடம் பேரணியில் எடுத்து வரப்பட்ட மகஜர், வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. தவரத்தினத்தால் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து பருத்தித்துறை செஞ்சிலுவை சர்வதேச குழு வதிவிடப்பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

பருத்தித்துறை இறங்குதுறையை 6 மணிக்கு பேரணி சென்றடைந்தது. அரச அதிபர் சார்பில் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசாமி அவர்களிடம் மகஜர் கையளிக்கப்பட்டதை அடுத்து பேரணி 6. 15 க்கு கலைந்து சென்றது. (இ-15-173-152)

யூப்பிட்டர்
கல்வி நிலையம்
சாவகச்சேரி
தாவரவியல்
AL 96, 97
...ஆரம்பமாகி
நடைபெறுகின்றன.
(41606)

## வீரம் ஊட்டிவிட்டு உறங்கும் அன்னை பூபதி

துயரமதைச் சுமந்து வந்த
தூய மண்ணின் விடிவிற்காய்
தென் தமிழ் ஈழமதில்...
பூவொன்று புயலானதுவே!
பொய்த்தோல் அணிந்தெங்கள்
பூமியிலே போர்தொடுத்த
டில்லிப் படைக் கெதிராய்
வீறு கொண்டெழுந்தனளே!
பசியை வென்றெங்கள்
தாயவள் பூபதியின் தியாகத்தால்
பாரதத்தின் சக்கரமும், மூவர்ணக்
கொடியுமிங்கு மூக்கிழந்து போனதுவே!
மட்டுவள தேசமதில்
மாமங்கராலயத்தில்
மாமகளின் இரு கொள்கை வழி
மாண்புடனே புகழ் சேர்ந்ததுவே!
விடுதலையே மூடிவென்ற
எம்மீழ இலட்சியத்திற்கு
பெரும் வீரம் ஊட்டிவிட்டு
தாயவள் பூபதி அமைதியாய் உறங்குகின்றாள்.

— சி. புஸ்பராசா

★ தியாகச் சுடர் அன்னை பூபதியின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.

## 'கிபிர்' விமானங்கள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேடாகக் காட்சியளித்தது.

குண்டுச் சிதறல்களும், குண்டு விழுந்து வெடித்ததினால் ஏற்பட்ட நிலச் சிதறல்களும் சுமார் 2 மைல் சுற்றாடலுக்கு வீசப்பட்டிருந்தன. வீடுகள் சில சிறு சேதங்களுக்குள்ளாகின.

இந்த விமானத் தாக்குதலின்போது அரியாலையில் இருந்து இடம்பெயர்ந்து இப்பகுதியில் வசித்து வரும் பொன்னையா சிவகுமார் (வயது 30) என்பவர் கையில் காயமடைந்தார்.

விமானம் பேரிரைச்சலுடன் வட்டமிட்டதைக் கண்டு மக்கள் பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்தும், பாதுகாப்புத்தேடி மறைவிடங்களில் ஒதுங்கியும், சிதறி ஓடியும் காயமெதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர். வீதிகளில் சென்றவர்கள் அப்படியே வீதியோரங்களில் படுத்திருந்தனர்.

இந்த குண்டு வீச்சை அடுத்து பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பதற்றமான நிலமை இருந்தபோதிலும் அரச அலுவலகங்கள் வழமைபோல இயங்கின.

(இ-15-173-118-152-80)

## அன்னை பூபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்.

வடமராட்சியில் மாலிசந்தியிலும், தென்மராட்சியில் மீசாலை மாவடிப் பிள்ளையார் கோவில் முன்றலிலும் பளை வட்டச் செயலகம் முன்பாகவும் அன்னை பூபதி நினைவாக இன்று இரவு 7-30க்கு பொதுக் கூட்டங்கள் நடைபெற உள்ளன.

அன்னை பூபதி நினைவு நாளை ஒட்டி வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வீதிகள் சிவப்பு, மஞ்சள் கொடிகளாலும், மகர தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு ஒலிபெருக்கிகளில் புரட்சிக் கீதங்களும் இசைக்கப்பட்டு வருகின்றன.

(அ-15-173-36)

## கையெழுத்து-.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள், பொதுமக்கள் என்று ஏராளமானவர்கள் உணர்வுபூர்வமாக இதில் பங்கேற்று தமது கையொப்பத்தையிட்டனர்.

இதைத் தொடர்ந்து தொண்டர்கள் கையெழுத்து சேகரிக்கும் பணியை ஆரம்பித்தனர்.

எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இப்பணி கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்படும்.

(இ-3-7-13-173)

## ராணுவ நடவடிக்கையை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவசர வேண்டுகோள்' என்ற தலைப்பிலான இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை வட மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தினது உறுப்பினராகிய நாமும் இப்பிரதேசத்து மீனவர்களின் பிரதிநிதிகளாகிய மீனவர் மேம்பாட்டுச் சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து நம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துரைத்து அவற்றுக்கு நிவாரணம் பெறும் நோக்குடன் வெள்ளாடை அணிவகுப்பொன்றை நடத்துகின்றோம்.

சிறிலங்கா பாதுகாப்புப் படையினரின் இராணுவ நடவடிக்கைகள் தொடங்கிய காலம்தொட்டு தமிழ் பிரதேசங்களிலே மீன்பிடித் தொழிலை அரசாங்கம் முற்றாக தடைசெய்துள்ளது. இந் கடும் தடை ஏறத்தாழ 5 ஆண்டுகளாக நடைமுறையிலுள்ளது. வாழ்க்கைதொழிலை இழந்து துன்புறும் எமது உறுப்பினர்களின் துயர்களைதுடைப்பதற்கு அரசாங்கம் எந்தவோர் ஏற்பாட்டையும் செய்யவில்லை. வேறுவழியின்றி பகல் வேளைகளிலே கரையோர நீர்நிலைகளிலே தொழிலுக்கு செல்லும் எமது உறுப்பினர் கடற்படையினராலும், விமானப் படையினராலும் தாக்கப்படுகின்றனர். இதனால் பலர் கொல்லப்பட்டும் காயமுற்றும் உள்ளனர்; சிலர் காணாமல் போயுள்ளனர்; இவர்களின் நிலை என்னவென்று தெரியாது; இவர்களின் குடும்பங்கள் திக்கற்றுப் போயுள்ளன. கரையோரத்தில் செறிந்து வாழும் மீனவர்களினது வாழ்விடங்கள் மீது எறிகணைகள் வீசப்படுகின்றன.

மன்னார் மாவட்டத்தில் நாச்சிக்குடாவில் நடந்த சம்பவத்தில் ''எம். ஐ. 24'' ரக உலங்கு வானூர்தி மீனவர்கள் குடியிருப்புக்கள் மீது தாக்கியதில் 17 பேர் இறந்தும் 50 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர்.

நமது பிரச்சினைகளை சிக்கலாக்கும் வகையில் கரையோர கிராமங்கள் மீதுஅரசு திட்டமிட்டு சிங்களக் குடியேற்றத்தை நடாத்தி வருகின்றது. இதனால் தமிழ் மீனவர்கள் பலர் தமது சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டுள்ளனர்.

மேதகையீர்! இவ்வாறு இருக்கும் வேளையில் மீண்டும் ஓர் இராணுவ நடவடிக்கையை வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களில் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே பல இராணுவ நடவடிக்கையினால் பலர் இறந்தும் காயமுற்றும் சொத்துக்களை இழந்தும் உள்ளனர். இத்தகைய நிலை நடக்கப்போகும் இராணுவ நடவடிக்கையால் மேன்மேலும் அதிகரிக்கும்; இடம்பெயரும் மக்களின் தொகையும் அதிகரித்து அவர்கள் சொல்லொணா துயருறுவர்.

மூன்று லட்சத்துக்கும் அதிகமான எமது உறுப்பினர்கள் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவருவது என்னவெனில்—

சிறிலங்கா அரசு தனது இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை தொடங்க வேண்டும் என்பதாகும். அத்துடன் எமது சொந்த வாழ்விடங்களுக்கு செல்லக்கூடிய வகையில் வழி செய்யவேண்டும். இத்தகைய நிலையை தோற்றுவிப்பதற்கு தங்களின் மேலான நல்லெண்ணத்தை உபயோகித்து சிறிலங்கா அரசாங்கத்தை வற்புறுத்துமாறு அன்புடன் வேண்டுகின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சாந்தலை தெற்கிலுள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 19-04-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org